# இலக்கு

இதழ் 65

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

பெப்ரவரி 16, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## அபிவிருத்தி என்ற பெயரில் சரணடைந்தால் விரைவில் தமிழுரை தேடிக் கண்டுபிடிக்கவேண்டிய நிலை ஏற்படும்

– சி .வி . விக்னேஸ்வரன் –

## அமெரிக்காவின் பயணத் தடை முக்கிய கட்டத்திற்கு பூகோள அரசியல்

வேல்ஸ் இல் இருந்து அருஸ்





## யுத்த பாதிப்புக்களை சுமந்த மக்களுக்கு வாழ்வதற்கு வழிகாட்டும் பப்பாசி செய்கை.

கோ- ரூபகாந்

## முனைப்புறும் பிரித்தாள்கை; முளைக்கும் புதிய கூட்டுகள்


மட்டூரான்





## அறிமுகப்படுத்தப்படும் புதிய நோய்களும் பயமுறுத்தும் செய்தி ஊடகங்களும்

பரமபுத்திரன்




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

## அமெரிக்கா தனது முடிவை மாற்றலாம் - இராஜதந்திரிகள்

அமெரிக்கா பயணத் தடைகளை விதிக்கின்ற போதும், அது நீக்கப்படும் சாத்தியங்கள் உள்ளதாக கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அமெரிக்கா தனது முடிவை மாற்றும் சந்தர்ப்பங்கள் அதிகம் என இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர். அதற்கு சிறந்த உதாரணம், இந்திய பிரதமர் நரேந்திர மோடியாகும். அவர் மீதும் அமெரிக்கா பயணத்தடையை விதித்திருந்தது.

இதனிடையே, அமெரிக்காவின் முன்னாள் அரச தலைவர் ஜோர்ச் புஷ் மற்றும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோர் போர்க் குற்றங்கள் மேற்கொண் டவர்கள் என சுயாதீன அறிக்கை தெரிவித்துள்ளதாக ஓய்வுபெற்ற சிறீலங்கா இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளதாக கொழு ம்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

## வெளிநாடுகள் விதிக்கும் கால எல்லைகள் இன நல்லிணக்கப்பாடுகளை பாதிக்கின்றதாம் - சிறீலங்கா



சிறீலங்கா மீது வெளிநாடுகள் முன்வைக்கும் கால எல்லைகள் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கப்பாடுகளை பாதிக்கின்றது. சிறீலங்கா விவகாரங்களை சிறீலங்கா அரசே மேற்கொள்ளும் என சிறீலங்காவுக்கான ஐ.நா பிரதிநிதி கேனுகா செனிவரத்தினா தெரிவித்துள் ளார்.

கடந்த வியாழக்கிழமை (13) இடம்பெற்ற ஐ.நா பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறீலங்கா இறமையுள்ள நாடு தனது உள்விவகாரங்களை சிறீலங்கா அரசே மேற்கொள்ளும் அனைத்துலகசமூகம் தொழில் நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை வழங்கினால் போதும்.

பாதுகாப்புச் சபைக் கூட்டம் பெல்ஜியத்தின் வெளிவிவகார அமைச்சர் தலமையில் இடம் பெற்றது. ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மிச்சேல் பசெலற், தென் ஆபிரிக்காவின் மனித உரிமைகள் அமைப்பின் நிறுவுனர் ஜஸ்மின் சூக்கா உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

## அமெரிக்காவின் தடை உத்தரவை முறியடிப்பதில் சிறீலங்கா தீவிரம்
### - இன்று அவசர சந்திப்பு



இன்று (16) கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவர் அலைனா தெப்லிஸ் ஐ அழைத்துள்ள சிறீலங்கா அரசு தனது கண்டனத்தை தெரிவிக்கவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனா அமெரிக்க தூதுவரு டன் கலந்துரையாடலை மேற்கொள்ளவுள்ளதாகவும், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோவின் அறிவித்தல் தொடர்பில் குணவர்த்தனா தனது கண்டனத்தை தெரிவிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இன்று ஞாயிற்றுக்கிழமையாக உள்ள போதும், இந்த விவகாரத்தின் முக்கியத்துவம் கருதி சிறீலங்கா அரசு அமெரிக்க தூதுவரை அழைத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சகத்தின் அனைத்துலக நடைவடிக்கை பிரிவின் 7031சி பிரிவின் அடிப்படையில் இந்த தடையை கொண்டு வந்துள்ளதாக பொம்பியோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்கூட்டத் தொடர்ஆரம்பமாகவுள்ள நிலையில் அமெரிக்காவின் அறிக்கை வெளிவந்துள்ளதாகவும், அது அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை வலுப்படுத்தலாம் எனவும் சிறீலங்கா அரசு அச்சம் அடைந்துள்ளதாக கொழும்பு வார ஏடு ஒன்று தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவின் தடை சிறீலங்காவுக்கான ஆயுத உதவிகள் படைத்துறை உதவிகளை தடை செய்யவில்லை எனவும், வேறு அதிகாரிகள் மீது தடை விதிக்கப்படவில்லை எனவும் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

## ஐ.நா உடன்பாட்டில் இருந்து வெளியேறுமாறு சிறீலங்கா அரசுக்கு கோரிக்கை




ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழு நிறைவேற்றிய 30/1 தீர்மானத்தில் இருந்து சிறீலங்கா அரசு வெளியேற வேண்டும் என சிறீலங்காவின் தேசிய இணைப்புச் சபை தெரிவித்துள் ளது. ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியை உப தலைவராக கொண்ட இந்த சபை மேலும் தெரி வித்துள்ளதாவது:

புதிய அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்ச இந்த ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தில் இருந்து வெளியேற வேண்டும்.

இந்த தீர்மானத்தை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீராவே ஏற்றுக் கொண்டிருந்தார். இது அமெரிக்கா மேற்கொண்ட சதி நடவடிக்கையாகும்.

வடக்கு கிழக்கு மக்களைத் தவிர நாட்டின் ஏனைய பகுதி மக்கள் கோத்தபாயாவுக்கே வாக்களித்துள்ளனர். அவர் 13 இலட்சம் அதிக வாக்குகளால் வெற்றி பெற்றிருந்தார் என அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, சிறீலங்கா அரசு தனது முழு வழங்களையும் ஒருங்கிணைத்து ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு நிறைவேற்றிய தீர்மானத்தில் இருந்து வெளியேற முற்படுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## போர்க் குற்றவாளி மீதான அமெரிக்காவின் தடையை வரவேற்கிறது கூட்டமைப்பு



சிறீலங்கா இராணுவத் தளபதியும் ஐக்கிய நாடுகள் சபையினால் போர்க் குற்றவாளி என அடையாளம் காணப்பட்டவருமான லெப். ஜெனரல் சவீந்திர சில்வா மீது அமெரிக்கா கொண்டு வந்துள்ள பயணத்தடைய வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பு நேற்று(15) வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போரின் போது 58 ஆவது படையணியை வழிநடத்திய சவீந்திர சில்வா பெருமளவில் நீதிக்குப் புறம்பான படுகொலைகளை மேற்கொண்டிருந்தார். அவரை இராணுவத் தளபதியாக அரசு நியமித்த போது அதற்கு கூட்ட மைப்பு எதிர்ப்பு தெரிவித்திருந்தது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சிறீலங்கா அரசின் கண்களை திறக்கலாம், நீதி விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறீலங்கா அரசு கடந்த 10 வருடங்களாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது. அமெரிக்காவின் நடவடிக்கையை நாம் முக்கியமான முன்னேற்றமாக கருதுகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறீலங்காவுடன் படைத்துறை ஒத்துழைப்புக்களை பலப்படுத்த இஸ்ரேல் ஆர்வம்

சிறீலங்காவுடன் படைத்துறை ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்தி புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக்கொள்ள விரும்புவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

சிறீலங்காவுக்கான இஸ்ரேலின் தூதுவர் கலாநிதி ரொன் மல்கா சிறீலங்கா பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ணவை சந்தித்தபோதே இதனை தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவில் விவசாயம், கல்வி, போக்குவரத்து, தொலைத் தொடர்பு மற்றும் கணணி பாதுகாப்பு பொறிமுறை ஆகிய துறைகளில் சிறீலங்காவை பலப்படுத்த இஸ்ரேல் உதவிகளை புரியும்.

இந்தியாவின் விவசாயத்துறைக்கு இஸ்ரேல் வழங்கிய உதவிகளால் பெருமளவான விவசாயிகள் பலனடைந்துள்ளதாக இஸ்ரேல் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சவீந்திர சில்வா அமெரிக்காவுக்குள் நுழைய தகுதியற்றவர் – பொம்பியோ


Secretary Pompeo @SecPompeo · 19h
I am designating Shavendra Silva making him ineligible for entry into the U.S. due to his involvement in extrajudicial killings during #SriLanka's Civil War. The U.S. will not waver in its pursuit of accountability for those who commit war crimes and violate #humanrights.
343 1.3K 4.6K

சிறீலங்கா இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சவீந்திர சில்வா அமெரிக்காவுக்குள் நுழைவதற்கு தகுதியற்றவர். அவர் மேற்கொண்ட நீதிக்குப் புறம்பான படுகொலைகளே இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது என அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோ தனது ருவிட்டர் சமூக வலைத்தளத்தில் தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் நீதிக்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏழு தமிழர் விடுதலைக்கு ஒரு ஈழத் தமிழர் அமைப்புகூட குரல் கொடுக்கவில்லையே?




*ஏழு தமிழர் விடுதலைக்காக தமிழக அமைச்சரவை நிறைவேற்றிய தீர்மானத்திற்கு தமிழக ஆளுநர் உடனே ஒப்புதல் வழங்கவும், அரசமைப்பு சட்டத்தின் 161 ஆவது பிரிவு மாநில அரசுக்கு வழங்கிய இறையாண்மை உரிமையை பாதுகாக்க தமிழக அரசை வலியுறுத்தியும், வரும் 17.2.2020 திங்களன்று காலை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை கீழ்வரும் 38 அமைப்புகள் முற்றுகை செய்யப் போவதாக அறிவித்துள்ளன.*

*1. நாம் தமிழர் கட்சி 2. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி 3. மார்க்சிய பொதுவுடமைக் கட்சி 4. இந்திய பொதுவுடமைக் கட்சி 5. தமிழ்ப்புலிகள் கட்சி 6. புரட்சிப் புலிகள் கட்சி 7. தமிழ்த் தேசிய பேரியக்கம் 8. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் 9. தமிழ்த் தேச மக்கள் முன்னணி 10. உயர் நீதிமன்றத்தில் தமிழ் போராட்டக் குழு 11. சம நீதி வழக்கறிஞர்கள் சங்கம் 12. ஆதித்தமிழர் கட்சி 13. புரட்சிகர இளைஞர் முன்னணி 14. மே 17 இயக்கம் 14. பெரியார் திராவிடர் கழகம் 15. திராவிடர் விடுதலை கழகம் 16. மக்கள் சட்ட உரிமை இயக்கம் 17. இஸ்லாமிய சேவைச் சங்கம் 18. குடியுரிமை பாதுகாப்பு நடுவம் (சிபிசிஎல்) 19. வீரத் தமிழர் முன்னேற்றக் கழகம் 20. ஆதித் தமிழர் பேரவை 21. அம்பேத்கர் தேசிய இயக்கம் 22. இக்வான் முஸ்லீம் தவ்கீத் ஜமாத் 23. சட்டக் கல்லூரி மாணவர்கள் 24. தமிழக வாழ்வுரிமை கட்சி 25. தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு கட்சி 26. வனவேங்கைகள் கட்சி 27. இந்திய தேசிய லீக் கட்சி 28. தைப் புரட்சி இயக்கம் 29. திருவள்ளுவர் பேரவை 30. தமிழக மக்கள் சனநாயக கட்சி 31. புரட்சிக் கவிஞர் பேரவை 32. தமிழ் தமிழர் இயக்கம் 32 ஒத்துழையாமை இயக்கம் 33. சமூகநீதி பண்பாட்டு மையம் 34. நாணல் நண்பர்கள் 35. 7தமிழர் விடுதலைக்கட்சி 36. திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை 37. மருது மக்கள் இயக்கம் 38. மக்கள் அதிகாரம்*

*இந்த ஏழு தமிழரில் 4 பேர் ஈழத் தமிழர்கள். ஆனால் இவர்களின் விடுதலைக்காக இதுவரை ஒரு ஈழத் தமிழர் அமைப்புகூட குரல் கொடுக்கவில்லை.*

*இந்த ஏழு தமிழர் விடுதலையில் உண்மையில் ஈழத் தமிழ் அமைப்புகளுக்கு அக்கறை இல்லையா? அல்லது குரல் கொடுத்தால் இந்திய அரசின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்று அஞ்சுகின்றனவா?*

*அடிக்கடி லண்டனுக்கு வந்து தன் மகளை பார்த்துச் செல்லும் சுமந்திரன்கூட அதே லண்டனில் இருக்கும் முருகன் நளினியின் மகள் தன் பெற்றோரை பார்க்க முடியாத நிலையில் இருப்பதையிட்டு குரல் கொடுக்க கூடாதா?*

**தோழர் பாலன்**

## அமெரிக்கா மற்றும் ஐ.நா. வின் பொறுப்புணர்வை அலட்சியப்படுத்தும் சிறீலங்கா

சிறீலங்காவின் இராணுவத் தளபதியும் பாதுகாப்பு அலுவலர்களின் பதில் தலைவருமான சவேந்திர சில்வாவும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்துள் நுழைவதைத் தடை செய்யும் உத்தரவை அமெரிக்க இராஜங்கச் செயலாளர் மிசல் ஆர் பொம்பியோ அவர்கள் பிறப்பித்துள்ளார். அமெரிக்காவின் 7031(C) இலக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அயல் நாட்டுச் செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பான செயற்திட்டங்கள் ஏற்புடைமைச் சட்டத்தின் கீழ் ஒருவர் கூட்டு வன்முறைகள் மற்றும் முக்கியத்துவப்படுத்தக் கூடிய ஊழல்கள் செய்திருந்தால், அவரையும் அவரது குடும்பத்தினரையும் ஐக்கிய அமெரிக்க நாட்டுக்குள் நுழைவதை அனுமதிக்கக் கூடாது என்பதற்கு அமைய அமெரிக்க இராஜங்க அமைச்சர் இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இந்தச் சட்டம் சவேந்திர சில்வாவின் கூட்டு மொத்த மனித உரிமை வன்முறைச் செயல்கள் தொடர்பான பொதுப் பொறுப்புக் கூறலாக அவர் மேல் பிரயோகிக்கப்பட்டுள்ளது. சவேந்திர சில்வா 2009ஆம் ஆண்டு சிறீலங்காவின் சிவில் யுத்தத்தின் இறுதியில் 58வது படைப் பிரிவின் கட்டளைப் பொறுப்பில் இருந்த பொழுது அவர் ஈடுபட்ட கூட்டு மொத்த மனித உரிமை வன்முறைகள் மற்றும் நீதிக்கு அப்பாற்பட்ட கொலைகள் குறித்து அமெரிக்காவுக்குக் கிடைத்த நம்பகமான தகவல்களின் அடிப்படையில் அமெரிக்காவின் மனித உரிமைகளுக்குப் பொறுப்புக் கூறும் கடப்பாடாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை ஐக்கிய இராச்சிய அமெரிக்கா சிறீலங்காவின் பாதுகாப்புக்கான இராணுவக் கூட்டுறவினைக் கொண்டிருப்பதால், சிறீலங்காவின் படைகள் அவசரகால நிலைமைகளையும் தோன்றக் கூடிய அச்சுறுத்தல்களையும் சமாளிப்பதற்காக இராணுவத்தை மறுவடிவமைத்து வருகிறது. அதே நேரத்தில் இந்த இராணுவப் பயிற்சிகளுக்கும் உதவிகளுக்கும் பங்கேற்புகளுக்கும் அடிப்படையான மூலக்கூறாக உள்ள மனித உரிமைகளை சிறீலங்காவை மதிக்கவும் செயற்படுத்தவும் வைக்க வேண்டிய கடப்பாட்டையும் கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் அமெரிக்கா சிறீலங்காவை மனித உரிமைகளை மேம்படுத்தும் படியும் யுத்தக் குற்றங்களுக்கும் மனித உரிமை வன்முறைகளுக்கும் பொறுப்பாக இருந்த தனிப்பட்டவர்களையும் பொறுப்புக் கூறலுக்கு உள்ளாக்கி பாதுகாப்புப் படைகளுக்கான சீர்திருத்தங்களை முன்னெடுத்து இதன் அடிப்படையில் நீதியையும் புனர் வாழ்வையும் செய்யும் படியும் வலியுறுத்தி வந்தது. இதனை சிறீலங்கா அலட்சியம் செய்த நிலையில் இத்தகைய உத்தரவுகளைப் பிறப்பிக்கா விட்டால், அமெரிக்கா மனித உரிமைகள் மேல் கொண்டுள்ள அக்கறைகளையும் வழிகாட்டல்களையும் உலகு குறைத்து மதிப்படும் நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டு விடும். எனவே இது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் அமெரிக்கத் தலையீடல்ல. மேலும் இன்றைய உலகில் கூட்டுப் பாதுகாப்புகள் பொருளாதார முயற்சிகளில் உள்ள எந்த ஒரு நாட்டுக்கும் அதன் இறைமை தனித்துவமாக இல்லை என்பது உலக அரசியலறிஞர்களின் கருத்து.

நடைமுறை உண்மைகள் இவ்வாறு இருக்க, சிறீலங்கா அமெரிக்கா இலங்கையில் மனித உரிமையினை நெறிப்படுத்த எடுத்த இந்த முயற்சியை அலட்சியம் செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட அரச அதிபரால் நியமிக்கப்பட்ட ஒருவர் குறித்து அமெரிக்கா எந்த வகையில் இவ்வாறு செயற்படாலாம் எனக் குற்றச்சாட்டை முன்வைத்து இதனை இறைமை மீறல் போல திசைதிருப்பி அமெரிக்காவின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு வற்புறுத்தி, தன் மனித உரிமை வன்முறைகளையும் யுத்தக் குற்றச் செயல்களையும் நியாயப்படுத்த முற்படுகிறது.

சனநாயக அரசு ஒன்று தனது குடிகள் எனத் தான் கொண்டுள்ள மக்களின் பாதுகாப்பான அமைதியையும் வளர்ச்சிகளையும் பேண முடியா விட்டால் அம்மக்கள் இனம் உலகின் மக்கள் இனம் என்ற வகையில் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதி செய்யும்படி உலக நாடுகளிடமும் அனைத்துலக நிறுவனங்களிடமும் கோருகின்ற பொழுது அவற்றுக்கு ஒரு நாட்டின் இறைமையையும் மீறி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகக் கூட உதவும் உரிமை உண்டு என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நிலைப்பாடாக உள்ளது. அதுவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் மனித உரிமைகளைப் பேண எடுக்கும் முயற்சிகளைப் பாதுகாப்புச் சபை கூட வீட்டோ அதாவது ரத்து செய்ய முடியாது பொதுச் சபையே எந்த முடிவையும் வாக்களிப்பால் நிறைவேற்ற வேண்டும் என்னும் அளவுக்கு ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைக்கு மதிப்பளிக்கிறது.

2015இல் இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகம் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றிய 30/1 இலக்கப் பிரேரணை 2017இல் 34/1 2019இல் 40/1 இலக்கத் தீர்மானங்களால் இரண்டு இரண்டு ஆண்டுகளாக இதுவரை நீடிக்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் இதனை அமுல் நடத்துவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்லட் அவர்களால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை இவ்வாண்டு பெப்ருவரி 24இல் ஆரம்பமாக உள்ள மனித உரிமை பேரவையின் 43வது கூட்டத் தொடரில் 27ஆம் திகதி ஆராயப்படுவதற்காக சிறீலங்கா அரசுக்கு அதன் பதிலைப் பெறுவதற்காக அனுப்பட்டது. இதற்கான பதிலாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறீலங்காவுக்கான நிரந்தரப் பிரதிநிதி கேஸ்கென்குவ செனிவரத்ன “சிறிலங்கா இறைமையுள்ள நாடு. அது தொடர்ந்தும் தன் விருப்புக்கேற்ற வகையிலேயே தன்முன்னுரிமைகள் எது என்பதை முடிவெடுக்கும். வெளியில் இருந்து எழுகின்ற கால எல்லைகள் புனரமைப்பு வேலைகளுக்குத் தொல்லையாகவே அமையும்” என ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலின் “ அமைதியைக் கட்டி எழுப்புதலும் நிரந்தரமான அமைதியும் யுத்த மற்றும் யுத்தப் பின் சூழலில் நிலைமாற்ற நீதி ” என்னும் ஒருநாள் கருத்தரங்கில் பேசிய பேச்சு அமைந்தது.

இவை எல்லாம் அமெரிக்காவினதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தினதும் மனித உரிமைகள் குறித்த பொறுப்புணர்வுகளையும் சிறீலங்காவின் மனித உரிமைகள் குறித்த அலட்சியப் போக்கையும் தெட்டத் தெளிவாக்குகின்றன. இந்நிலையில் புலம்பெயர் தமிழர்களும் தமிழகம் உட்பட்ட உலகத் தமிழர்களும் தங்கள் தங்கள் நாடுகளின் அரசாங்கங்களிடம் ஈழத்தமிழர்களின் மனித உரிமைகள் குறித்த உலகின் பொறுப்பை வெளிப்படுத்துமாறு கோர வேண்டிய காலமாக இந்த பெப்ருவரி மாதம் அமைகிறது.

***- ஆசிரியர்***



# அபிவிருத்தி என்ற பெயரில் சரணடைந்தால் விரைவில் தமிழரை தேடித் கண்டுபிடிக்கவேண்டிய நிலை ஏற்படும்

**– சி .வி . விக்னேஸ்வரன் –**

***‘அபிவிருத்தி என்ற பெயரில் அரசாங்கத்திடம் சென்று சரணடைந்து விட்டோமானால், அதற்குப் பின்னர் அதிலிருந்து மீளமுடியாது. 15, 20 வருடங்களின் பின்னர் தமிழர்களையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்’ என முன்னாள் வடமாகாண முதலமைச்சரும், தற்போது தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் தலைவராகவும் இருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தெரிவித்தார்.***

***தமது கட்சி தொடர்பாகவும், தமிழர் பாரம்பரியம் பற்றியும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவும் தமது நிலைப்பாட்டை விளக்கி இலக்கு இணையத்திற்கு அவர் வழங்கிய பிரத்தியேக நேர்காணல்.***

**கேள்வி:**

***மக்களின் பல்வேறு விமர்சனத்திற்கு மத்தியில் உருவாக்கப்பட்டுள்ள உங்கள் மாற்று அரசியல் தலைமை பற்றியும் அதன் அவசியம் பற்றி கூறுங்கள்?***

**பதில்:**

உச்ச நீதிமன்றத்தில் இருந்து இளைப்பாறிய பின்னர் சுமார் பத்து வருடங்கள் மிகவும் சந்தோசமாக, மகிழ்வாக வாழ்க்கையை நடத்திக் கொண்டு வந்த என்னை திடீரென வடமாகாண முதலமைச்சராக மாற்றி விட்டார்கள். அப்போது நான் அந்தப் பதவியையும் அதன் பொறுப்புக்களையும் எவ்வாறு ஏற்று நடத்தினேனோ அதே போன்று தான் புதிதாக வந்திருக்கும் எனது பதவியை ஏற்று நடத்தத் திட்டமிட்டுள்ளேன். என்னைப் பொறுத்தவரையில் இது எனது கடமையின் ஒரு அங்கம். கடமையைச் செய். பலனை எதிர்பாராதே என்ற அடிப்படையில் எனது வாழ்க்கையை நடத்திக் கொண்டு வருவதால், வருகின்ற கடமைகளை செய்து கொண்டே போவேன்.

**கேள்வி:**

***விடுதலைப் புலிகள் இயக்க காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைகளுக்கும், உங்களால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல்தலைமைகளின் கொள்கைகளுக்கும் எவ்வாறான வேறுபாடு இருக்கின்றது?***

**பதில்:**

விடுதலைப் புலிகள் காலத்தில் கட்சிகள் ஒன்று சேர்க்கப்பட்டது அவர்களின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அல்ல. சனநாயக ரீதியாக அவர்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை கொண்டு நடத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் அது நடைபெற்றது. இவர்களை ஒன்று சேர்த்தது சனநாயக ரீதியாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும் என்பதற்காகவே. ஆனால் 2009 இன் பிற்பாடு எங்களுக்குக் கிடைத்த தலைமைத்துவம் எங்கள் கொள்கை ரீதியான எவற்றை தேசியத் தலைவர் எதிர்பார்த்தாரோ அவற்றை செய்யாது அசட்டை செய்து வந்திருக்கின்றோம். சனநாயக ரீதியாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக எந்தெந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவற் றை நாங்கள் முறையாக சுயநலமின்றி நடவடிக்கைகளை எடுத்துச் செல்வதே எமது கடமை.

**கேள்வி:**

***புதிதாக உருவாக்கப்பட்ட உங்கள் கூட்டணியில் ஒரு உறுப்பினரையேனும் பாராளுமன்றத்திற்கு அனுப்ப முடியாது என்று சுமந்திரன் அண்மை யில் கூறியிருந்தார். அவரின் கருத்து தொடர்பாக உங்களின் நிலைப்பாடு என்ன?***

**பதில்:**

எங்களைப் பற்றி அவர் கூறிய பல விடயங்கள் நடைபெறவில்லை. அவர் கூறியது சரியாக வருமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி:**

***சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கிடையில் முறுகல் நிலை தொடர்ச்சியாக காணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த முறுகல் நிலையை உங்களால் ஏன் தீர்க்க முடியவில்லை? பிரச்சினையைத் தீர்த்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை ஏன் உங்கள் கட்சியில் இணைக்க முன்வரவில்லை?***

**பதில்:**

இதை நீங்கள் கஜேந்திரகுமாரிடம் தான் கேட்க வேண்டும். இதற்கு நான் பதில் கூற முடியாது. ஏனெனில் ஒருகாலத்தில் தமிழ் மக்கள் பேரவையில் இவர்கள் இருவரும் எனக்கு பக்கத்தில் இருந்தார்கள். நாங்கள் கருத்தொருமித்து கொள்கை ரீதியாக ஒருமித்து செயற்பட்டோம். ஒருமித்து சில ஆவணங்களைத் தயாரித்து அரசாங்கத்திடம் ஒப்படைத்தோம். அப்போதெல்லாம் சுரேஷ் அண்ணா என்று கஜேந்திரகுமார் கூறுவார். ஏதோ ஒரு காரணத்திற்காக அவரை விடுங்கள் நாங்கள் வருகின்றோம் என்று சொன்னதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒருவரை விலக்கி ஒருவரை சேர்த்துக் கொள்ள முடியாது. நாங்கள் எல்லோரும் சேர்ந்து தான் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தோம். அதேபோல் சேர்ந்து இயங்குவதானால், இப்போதும் அவரை ஏற்றுக் கொள்ள முடியும். அதில் ஒரு பிரச்சினையும் இல்லை.


**கேள்வி:**

***போருக்கு பிந்திய காலப் பகுதியில் தமிழர் தாயகப் பகுதியில் மக்கள் அன்றாட வாழ்வாதார தேவைக்காவே போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மக்களின் போராட்டக் குணமும் உரிமைக்கான தாகமும் எவ்வாறு சாத்தியப்படும் என நினைக்கிறீர்கள்?***

**பதில்:**

அதற்கு நாங்கள் எங்கள் புலம்பெயர் மக்களின் ஆதரவைப் பெற்று எல்லாவற்றையும் செய்து கொண்டு வந்திருக்கின்றோம். இப்பொழுதும் செய்கின்றோம். அந்த ரீதியில் எங்கள் மக்களின் பொருளாதாரம் மிகவும் வறுமைக் கோட்டிற்குள் இருப்பதன் காரணமாக அவர்களை அடையாளம் கண்டு அவர்களை தனித்தனியாக அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த நாங்கள் நடவடிக்கை எடுத்தக் கொண்டு வந்திருக்கின்றோம். அதற்கு எங்கள் புலம்பெயர் மக்கள் ஆதரவு தந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் இந்த அடிப்படையில் நாங்கள் அரசாங்கத்திடம் சென்று சரணடைந்து விட்டோமானால், அதற்குப் பின்னர் அதிலிருந்து மீள முடியாது. 15, 20 வருடங்களின் பின்னர், இப்போது



இலங்கையில் பறங்கியரை எப்படி தேடிக் கண்டு பிடிக்கின்றோமோ அவ்வாறே தமிழர்களையும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும். இங்கு எல்லாமே சிங்களமயமாகி பௌத்தமயமாகி விடும். ஏனெனில் நீங்கள் பொருளாதார ரீதியாக உதவி பெறுமிடத்து, அவர்கள் பொருளாதாரத்தையும் தந்து கொண்டு தங்கள் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். கிளிநொச்சியில் பார்த்தால் சிங்கள பௌத்த சின்னங்கள் இப்போது இருக்கின்றது. எமது பகுதியில் ஒரு இலட்சம் வரையான இராணுவத்தினர் இருக்கின்றனர்.

எனவே இவற்றையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டே நடவடிக்கையில் இறங்க வேண்டும். பொருளாதார ரீதியாக இராணுவத்



தினர்கூட எமக்கு நன்மையளிப்பதாக கூறுகின்றார்கள். இவற்றிற்குள் நீங்கள் அகப்பட்டுக் கொண்டால், அதிலிருந்து மீள முடியாத ஒரு நிலை ஏற்படும். எனவேதான் நாங்கள் பாராளுமன்றத்தில் ஒருமித்து எங்கள் நடவடிக்கைகளைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த 5 வருடகாலத்தில் இந்த நடவடிக்கைகளை எடுத்திருக்கலாம்.

ஒரேயொரு விடயத்தை அவர்கள் கூறியிருக்கலாம். அது என்னவெனின் எங்கள் அரசியல் கைதிகளை விடுவியுங்கள். அல்லாது போனால் அடுத்த முறை பாதீட்டில்(பட்ஜெட்) நாங்கள் ஆதரவு தெரிவிக்க மாட்டோம் என்று

**தொடர்ச்சி 08ம் பக்கம்**



# யுத்த பாதிப்புக்களை சுமந்த மக்களுக்கு வாழ்வதற்கு வழிகாட்டும் பப்பாசி செய்கை.

கோ- ரூபகாந்

**வ**வுனியா வடக்கு விவசாயிகளின் அபார முயற்சியினால் நடப்பாண்டில் பப்பாசி பழ ஏற்று மதிகளில் 7 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது. இதன் மூலம் வவுனியா வடக்கு பழச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு 24 இலட்சம் ரூபாய் இலாபமாக கிடைத்துள்ளது.

யுத்தத்தினால் பொருளாதார ரீதியாக நொந்து போயுள்ள மக்களுக்கு பப்பாசி செய்கை வரு மானத்தை ஈட்டிக் கொடுக்கின்றது. குறிப்பாக வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்ற கிராமங்களில் வாழும் மக்கள் பலர் மெல்ல மெல்ல தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பி வருகின்றனர்.



நெடுங்கேணிப் பகுதியில் உள்ள சன்னாசி பரந்தன், சின்னடம்பன், ஒலுமடு, மாறாஇலுப்பைக்குளம், துவரங்குளம், பட்டிக்குடியிருப்பு, புளியங்குளம் வடக்கு, கனகராயன்குளம் வடக்கு உள்ளிட்ட பல கிராமங்களில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி யெழுப்பும் முகமாக பப்பாசிச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

வவுனியா வடக்கு பகுதியில் பப்பாசி செய்கையை செய்வதற்கு அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று விவசாய திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்துடன் இணைந்து ஆரம்பத்தில் உதவி செய்திருந்தது. தற்போது பல கிராமங்களில் மக்கள் தாமாகவே இப் பயிர் செய்கையில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள். இதே வேளை, அவர்களது உற்பத்தியை சந்தைப்படுத்தும் நோக்கிலும் அவர்களது பிரச்சனைகளை கலந்தாலோசிக்கும் நோக்கிலும் பழப்பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

200 பயிர் செய்கையாளர்கள் இணைந்து இந்த சங்கத்தை அமைத்திருந்தனர். இலங்கை ஏற்றுமதியாளர் சம்மேளத்தினால் 2015ஆம் ஆண்டுக்கான சிறந்த ஏற்றுமதியாளர் என்ற விருதைப் பெற்றுள்ள இந்தச் சங்கம், மத்திய கிழக்கு நாடுகளுக்கு பப்பாசிப் பழத்தை ஏற்று மதி செய்து வருகிறது.

கையில் ஒரு பையுடன் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த நிலையில் மீள்குடியேறிய மக்கள், இன்று தமது பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதற்கு இப்பயிர் செய்கை பெரிதும் உதவியுள்ளது.

கணவனை யுத்தத்தில் காவு கொடுத்து விட்டும், தமது கணவன்மாரை காணாமல் போனோர் வரிசையில் இணைத்து விட்டும் வாழ்வதற்கு வழி தெரியாது தவித்த பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பலவற்றுக்கும் பப்பாசி செய்கையே வாழ்வாதாரத்தை கொடுத்துள்ளது.

கணவனை இழந்த நிலையில் கல்வி கற்கும் மூன்று பிள்ளைகளுடன் துவரங்குளம் பகுதியில் வாழும் தாயார் ஒருவர் கூறுகையில், என்னுடைய கணவன் யுத்தத்தில் இறந்து விட்டார். மூன்று பிள்ளைகளையும் கல்வி கற்க வைக்க முடியாமல் மிகவும் கஸ்ரப்பட்டேன். தோட்டம் செய்து அதில் வரும் வருமானத்தில் என்றாலும் குடும்பத்தை கொண்டு நடத்தலாம் என்று நினைத்தேன். ஆனால் அது கூட சாதகமாக அமையவில்லை. கூலி வேலைக்குச் சென்றேன். கணவன் இல்லை என்பதால் பலரும் பல விதமாக சிந்தித்தார்கள். என்னாலே எதுவுமே முடியவில்லை. இதனால் ஒரு கட்டத்தில் விரக்தி அடைந்து பிள்ளைகளுடன் செத்திடலாமோ என்று கூட நினைத்தேன். ஆனால் பப்பாசி பயிர்ச் செய்கை பற்றி அறிந்து அதையும் ஒரு தடவை செய்து பார்ப்போம் என முடிவெடுத்து அதனைச் செய்தேன். தற்போது வருமானம் கிடைக்கிறது. அதன் பாராமரிப்புக்கான செலவுகள் போக கிடைக்கும் வருமானத்தில் எனது பிள்ளைகளை நான் நல்ல படியாக கல்வி கற்க வைக்கின்றேன் என்றார்.

இவ்வாறு கடந்த பல மாதங்களாக தமது வாழ்வாதரத்தை கொண்டு நடத்துவதற்கு பப்பாசிச் செய்கையே உதவியது என்கின்றனர் செய்கையாளர்கள். பப்பாசி கன்று நாட்டப்பட்டு 6 மாதங்களில் இருந்து பயன் பெறக் கூடியதாக இருப்பதுடன், இதற்கான உற்பத்திச் செலவும் மிகக் குறைவாகவே உள்ளது.

ஆரம்பத்தில் பப்பாசி விதைகளை அல்லது கன்றுகளை வாங்கி நடுவதற்கும், வாரத் தில் மூன்று தடவை தண்ணீர் பாய்சுவதற்குமே செலவு. ஆறு மாதங்களில் காய் பிடிக்கத் தொடங்கியதும் 10 ஆம் மாதத்தில் இருந்து வருமானத்தைப் பெற முடியும்.

பப்பாசி செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு கால் ஏக்கருக்கு மாதாந்தம் 30,000 ரூபாய் தொடக்கம் 40,000 ரூபாய் வரை வருமானம் கிடைப்பதாகவும் இதனைக் கொண்டு குடும்பத்தைக் கொண்டு நடத்தக் கூடியதாகவும் உள்ளது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பழப்பயிர் செய்கையாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் கூறுகையில், எங்களுடைய செய்கையாளரின் உற்பத்தியை சந்தைப்படுத்த தனியார் கம்பனி ஒன்றிடம் ஒப்பந்தம் செய்துள்ளோம். அவர்கள் கிழமையில் ஒரு தடவை வந்து கிலோவுக்கு 30ரூபாய் படி பப்பாசியை கட்டிக் கொண்டு போய் எங்கள் சங்கத்தின் மூலம் பணத்தை தருகிறார்கள்.

அவர்கள் கட்டிக் கொண்டு போன பின் தனியார் சந்தைகளில இருந்து வந்து பப்பாசிப் பழங்களை 20 ரூபாய் படி கட்டுவார்கள். தற் போது எல்லோருக்கும் வருமானம் வருகிறது என்கிறார்.

இவ்வாறு பப்பாசி செய்கையில் வருமானம் வருகின்ற போதும் வவுனியா வடக்கின் சில கிராமங்களில் ஊடுவுரும் யானைகள் இப் பப்பாசி பயிர்களை நாசப்படுத்தி அக் குடும்பங்களின் பொருளாதாரத்தை அழித்து விடுகின்றது. இதனால் பலர் மீண்டும் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளனர்.

வாழ்வதற்கு வழிகாட்டும் தமது பயிர்களை பாதுகாக்க கூடிய ஏற்பாடுகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் செய்து தரவேண்டும் என்பது பயிர் செய்கையாளரின் கோரிக்கையாகவுள்ளது.



இது தவிர, யுத்தம் முடிவடைந்து 11 வருடங்கள் கடந்த நிலையிலும் பல குடும்பங்கள் வாழ்வதற்கு வழி தெரியாது தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இப் பப்பாசி செய்கையில் ஈடுபட ஆர்வமாகவும் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு உள்ள ஒரே பிரச்சினை. பப்பாசி பயிர்ச் செய்கைக்கான விதைகளைப் பெறுவதற்கும், அதனை முதல் 6 மாதங்கள் வாரத்தில் மூன்று தடவையாவது நீர் இறைந்து பராமரிப்பதற்கும் உரிய மூலதன வசதி இன்மையே. எனவே, வடக்கின் அபிவிருத்தி, தொழில் முயற்சி உதவிகள் என கூறிக் கொள்ளும் அரசாங்கமும், தாயக உறவுகளுக்காக உதவி செய்யும் புலம்பெயர் உறவுகளும் இவ்வா றான பயிர்செய்கை நடவடிக்கைகளுக்கு வழங்கும் உதவிகளை அதிகரிப்பதன் மூலம் மீள்குடியேறிய நிலையில் அவலத்துடன் வாழும் பல குடும்பங்களின் வீடுகளில் விளக்கு ஒளிரும் என்பதே உண்மை.

• • •

# முனைப்புறும் பிரித்தாள்கை; முளைக்கும் புதிய கூட்டுகள்

மட்டுரோன்

***2009***ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த பின்னரும், தமிழ் மக்கள் மீதான பேரினவாத அடக்குமுறைகள் பல்வேறு வடிவங்களில் முனைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளை எதிர்ப்புகள் இன்றி இலகுவாக முன்னெடுத்துச் செல்ல இவர்கள் இன்று மீண்டும் கையில் எடுத்துள்ள ஆயுதம் 'பிரித்து ஆள்தல்' என்பதாகும். எமது கைகளாலே எம்மை குத்தும் செயற்பாடுகளை சிறிலங்கா அரச தரப்பு மிகக் கச்சிதமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

இளைஞர்கள் இந்த நாட்டில் தமிழர்களுக்கு விடுதலை கோரி ஆயுதப் போராட்டத்தில் உணர்வு ரீதியாக குதித்த போது, அவர்களுக்கு மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி போராட்டங்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகளை சிறிலங்கா மற்றும் இந்திய அரசுகள் முன்னெடு த்திருந்தன.

அந்த வகையில் தொடர்ச்சியான விடுதலைப் போராட்டம் ஊடாக தமிழர்களின் வீரத்தினையும் தமிழர்களின் நியாயமான கோரிக்கையினையும் உலகின் பக்கம் கொண்டு சென்ற தமிழீழ விடுதலைப்புலிகள் விடயத்திலும் பல வகையான பிளவுகளை ஏற்படுத்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.




இவ்வகையான பெரும்பாலான முயற்சிகள் பயனற்று போனபோதும், (மாத்தையாவை பயன்படுத்தி இந்தியா விடுதலைப் போராட்டத்தை அழிக்க மேற்கொண்ட முயற்சி இதில் குறிப்பிடத்தக்கது) கருணாவை கொண்டு விடுதலைப் புலிகள் அமைப்பினை பலவீனப்படுத்தும் முயற்சியில் சிங்கள பேரினவாதம் ஓரளவு வெற்றிபெற்றதென்றே கூறவேண்டும்.

ஆயினும் 'கிழக்கை பிரித்தெடுத்தல்' என்ற அவர்களின் குறிக்கோளை அவர்களால் எட்ட முடியவில்லை. பல்வேறு பிளவுகள் பிரித்தாளும் தந்திரங்களை கிழக்கில் பேரினவாதிகள் தொடர்ச்சியாக முன்னெடுத்த போதிலும் இங்குள்ள தமிழ் மக்களின் ஒன்றுபட்ட தேசியம் தொடர்பான உறுதியான நிலைப்பாட்டை அவர் களால் வெற்றி கொள்ள முடியவில்லை.

விடுதலைப்புலிகளின் காலத்திற்கு பின்னர் கிழக்கில் பிள்ளையான், கருணா ஆகியோரை பயன்படுத்தி அரசியல் செய்து தமது எண்ணங்களை நிறைவேற்ற மேற்கொண்ட முயற்சிகளும் பயனளிக்கவில்லை.

இந்த நிலையில் இன்று பேரினவாதம் கிழக்கில் தமிழ் மக்களினால் கடந்த காலங்களில் புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பவாதிகளையும் தனிப்பட்ட சுயதேவையுடையவர்களையும் இணைத்து தமிழர்களின் கூட்டணியென்ற பெயரில் பல்வேறு குழுக்களை உருவாக்கி அவற்றை தமது தேவைகளுக்காக பயன்படுத்தும் நடவடிக்கையில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இரு



ப்பை உறுதி செய்வதில் மட்டக்களப்பு மாவட்டம் காத்திரமான பங்கை வகித்து வருகிறது. இங்கு அதிகளவான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்களை தமிழ் தேசியம் சார்ந்து தமிழ் மக்கள் தெரிவு செய்து வருகின்றனர். இந்த நிலைமையை சீர்குலைக்கும் நோக்குடனே இன்று மட்டக்களப்பில் பல்வேறு 'அரசியல் குழுக்கள்' தோற்றுவிக்கப்படுகின்றன.

அதற்காக கோடிக்கணக்கில் பணமும் இறைக்கப்படுவதகாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த காலங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் வெற்றி பெற்ற பியசேன, வியாழேந்திரன் போன்றவர்கள் பேரம் பேசலில் சோரம் போன வரலாறு நாம் அறிந்ததே.

எதிர்வரும் சித்திரை மாதம் பாராளுமன்ற தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ள நிலையில், தமிழ் தேசியத்திற்கு எதிரான பல்வேறு குழுக்களை 'தமிழர்' என்ற அடையாளத்துடன் களமிறக்கும் முனைப்பு கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மட்டக்களப்பில் இருந்து 'கிழக்கு தமிழர் ஒன்றியம்' என்னும் பெயரில் ஒரு பகுதியினரும் 'கிழக்கு தமிழர் கூட்டணி' என்றவகையில் ஒரு பகுதியினரும் தங்களுக்கு ஏற்றாற்போல் கூட்டணிகளை ஒன்று சேர்க்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் ஊடாக பிள்ளையான் கருணாவினை ஒருங்கிணைத்து ஒரு அணியாக களமிறக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் நிலையில், கிழக்கு தமிழர் கூட்டணி ஊடாக வியாழேந்திரன், அருண் தம்பிமுத்து போன்ற, தமிழர்களினால் புறக்கணிப்பட்டு விர ட்டப்பட்டவர்களை ஒருங்கிணைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான கூட்டணிகளின் பின்னால் பேரிவான கட்சிகள் இருப்பது வெளிப்படையாகவே தெரிந்த உண்மையாகவுள்ளது.

இவற்றிற்கு மத்தியில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இக்கூட்டணிகளில் இணைவதற்கு மறுப்பு தெரிவித் துள்ளன. தமிழ் தேசிய கொள்கைக்கு அப்பால் செயற்படும் எந்த அமைப்புகளுடனும் கூட்டணிகளை ஏற்படுத்த முடியாது என இரு கட்சிகளும் அறிவித்துள்ளன.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கிழக்கு தமிழர் ஒன்றியம், கிழக்கு தமிழர் கூட்டணி ஆகிய இரு அமைப்புகளும் தற்போதைய ஜனாதிபதிக்கு சார்பான கள பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த அமைப்புகளாகும். இந்த அமைப்புகள் அரசியலில் ஈடுபடப் போவதில்லையென அறிவித்திருந்த போதிலும், தேர்தல் நெருங்கி வரும் காலத்தில் அவற்றின் முகத்திரைகள் விலக ஆரம்பித்துள்ளன. அதில் உள்ளவர்கள் முழுநேர அரசியல் செயற்பாட்டாளர்களாக மாறியுள்ளனர்.

மறுமுனையில் பட்டிருப்பு தொகுதியில் முன்னாள் பிரதியமைச்சர் கணேசமூர்த்தியினால் இலங்கைத் தமிழர் முற்போக்கு முன்னணி எனும் புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கிழக்கு தமிழர் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்று இந்த கட்சியை ஆரம்பித் துள்ளனர்.

இன்றைய ஆட்சியாளர்களின் தொடர்புகளுடன் முன்னாள் பிரதியமைச்சரினால் இந்த கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நில அபகரிப்பு, காணாமல் போனோர் பிரச்சினை, இருப்பினை கேள்விக்குறியாக்கும் செயற்பாடுகள் என பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பலத்தினை சிதைப்பதன் மூலம் கிழக்கில் உள்ள தமிழர்களின் குரல் வளையினை நசக்கும் செயற்பாடுகள் முன்னெடு க்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையிலேயே மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறாக கூட்டமைப்புகளை உருவாக்கி தமிழ் மக்கள் மத்தியில் உள்ள வாக்கு பலத்தினை சிதைத்து தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க முடியும் என அரசு எண்ணுகின்றது.
மேலும் அண்மையில் மட்டு. ஊடக அமையத்தில் ஏழு ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. தமிழ் தேசியத்திற்கு ஆதரவாக செயற்படும் ஊடகவியலாளர்களின் குரல்வளையினை நசுக்குதல் உட்பட கிழக்கின் நிலைமைகள் தொடர்பில் வெளிப்படுத்தல்களை தடுக்கும் வகையில் இந்த செயற்பாடுள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



தமிழர்களின் இருப்பு இங்கு உறுதி செய்யப்பட வேண்டுமானால், தமிழர் தேசிய அரசியலில் ஈடுபடும் கட்சிகள் தம்மை சுயபரி சோதனைக்குட்படுத்திக் கொண்டு மக்களின் தமிழ் தேசிய நலனுக்காக தம்மை அர்ப்பணித்து செயற்பட வேண்டும். அவை தமக்குள் ஒரு குறைந்த பட்ச பொது இணக்கப்பாட்டையாவது ஏற்படுத்தி பயணிக்க வேண்டும்.

வடக்கில் உள்ள அரசியல் புவிசார் நிலைமைகள் வேறு. இங்குள்ள நிலைமைகள் வேறு. இந்த வகையில் இங்குள்ள தமிழ் தேசிய அரசியற் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது தவிர்க்க முடியாத காலத் தேவையாகும். அவ்வாறு இல்லையாயின் கிழக்கில் தமிழரின் இருப்பே இல்லை என்ற நிலை ஏற்பட நெடுநாளாகாது.

• • •

## உலகம் எங்கும் பரவி வரும் கொரோனா வைரஸ்
# பிரான்ஸில் ஒருவர் பலி



உலகமக்களையும், சீனாவையும் அச்சத்தில் ஆழ்த்தி வரும் கொரோனா வைரஸ் இன் தாக்கத்திற்கு பிரான்ஸ் இல் ஒருவர் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவுக்கு வெளியில் இடம் பெற்ற நான்காவது மரணம் இது என்ற போதும், ஆசியா கண்டத்திற்கு வெளியில் நிகழ்ந்த முதலாவது மரணம் இதுவாகும்.

பிரான்ஸிற்கு சுற்றுலாப் பயணியாக வந்திருந்த 80 வயதான பெண்மணியே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அவர் தனது மகளுடன் வந்திருந்தார். மகள் தற்போது குணமடைந்து வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அதே சமயம் இந்தவைரஸின் தொற்றுதலுக்கு உள்ளான மேலும் 11 பேர் பிரான்ஸ் இல் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதனிடையே, கடந்த 24 மணிநேரத்தில் 143 பேர் மரணமடைந்துள்ளதாகவும், இதுவரை 1526 பேர் மரணமடைந்துள்ளதாகவும், 67000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சீன அதிகாரிகள் நேற்று (15) தெரிவித்திருந்தனர். பாதிக்கப்பட்டவர்களில் 66,492 பேர் சீனாவிலும் ஏனையோர் சீனாவுக்கு வெளியிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வூகன் வைரஸ் எனப்படும் இந்த கொரொனா வைரஸ் ஆபிரிக்காவிலும் பரவி வருவதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

## புறுண்டியில் மனிதப் புதைகுழி 6,000 சடலங்கள் மீட்பு




புறுண்டியின் கருசி மாகாணத்தில் கண்டறியப்பட்ட ஆறு மனிதப் புதைகுழிகளில் இருந்து 6,032 சடலங்களின் எலும்புக் கூடுகளும், உடைகளும் ஆயிரத்திற்கு மேற்பட்ட துப்பாக்கிச் சன்னங்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாடு முழுவதிலும் உள்ள மனிதப் புதைகுழிகளை கண்டறியும் அரசின் நடவடிக்கை கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமாகியதில் இருந்து தற்போது வரையிலும் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இதுவே மிகவும் பெரியது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உடைகள், எலும்புக்கூடுகள் மற்றும் சன்னங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், கொல்லப்பட்டவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் உண்மை மற்றும் இன நல்லிணக்கப்பாட்டுக்கான ஆணைக் குழுவின் அதிகாரி பிரெ கிளவெர் டைகரியே தெரிவித் துள்ளார்.

2014 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இந்த ஆணைக்குழு 1885 ஆம் ஆண்டு காலனித்துவ ஆட்சி நடைபெற்ற காலத்தில் இருந்து 2008 ஆம் ஆண்டு உள்நாட்டு போர் நிறைவடைந்த காலப்பகுதி வரையிலான காலப்பகுதிகளில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக ஆய்வு செய்து வருகின்றது.

இதுவரையில் 4000 புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ளதுடன், படுகொலை செய்யப்பட்ட 142,000 மக்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். புறுண்டி நாட்டின் சனத்தொகை குடு மற்றும் ருற்சி ஆகிய இரு இனங்களைக் கொண்டது. இரு இனங்களுக்குமிடையில் இடம்பெற்ற போரில் 3 இலட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகி ன்றது.

இதனிடையே, எதிர்வரும் மே மாதம் அங்கு தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், வன்முறைகள் இடம்பெறலாம் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

## சர்வதேச நீதிமன்ற விசாரணை தேவை – செ.கைரெலி




இலங்கையின் காணாமல் போனவர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமானால், இலங்கையினை சர்வதேச நீதிமன்றம் ஊடாக சர்வதேச சமூகம் விசாரணை செய்வதன் மூலமே தீர்வினை வழங்க முடியும் என வடகிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் திருமலை மாவட்ட தலைவி திருமதி செ. கைரெலி தெரிவித்தார்.

வடகிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு வெள்ளிக்கிழமை (14) பகல் மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்றது.

உள்ளக விசாரணைகள் மூலம் காணாமல் போனவர்களுக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. இலங்கை அரசாங்கம் வழங்கிய உறுதி மொழிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. இந்த நிலையில் மீண்டும் கால நீடிப்பு வழங்கப்படுவதனால் எந்த வித செயற்படுகளும் முன்னெடுக்கப்படாது. காணாமல் ஆக்கப்பட்ட வர்களுக்காக உருவாக்கப்பட்ட அலுவலகம் வெறும் கண்துடைப்பாகும். காணாமல் போனவர்களுக்கு நீதி கிடைப்பதாக இருந்தால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஊடாகவோ அல்லது குற்றவியல் விசேட தீர்ப் பாயம் ஊடாகவோ இலங்கை தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர் வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐநா. மனித உரிமைகள் கூட்டத் தொரில் பங்கு கொள்ளும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய உறுப்பு நாடு களின் மனசாட்சியை தட்டும் வகையில் பாதிக்கப்பட்ட மக்களாகிய நாம் வடகிழக்கு தழுவிய ரீதியில் வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கில் அம்பாறையிலும் மாபெரும் கவன ஈர்ப்பு பேரணியை நடாத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக சீனா நிற்கும்

பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக சீனா என்றும் நிற்கும் என சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி அவர்கள் தெரிவித்துள்ளார்.

யேர்மனிக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சீனாவின் மனித உரிமை செயற்பாடுகள் குறித்து அனைத்துலக சமூகம் தெரிவித்துவரும் கருத்துக்களை நாம் மறுக்கின்றோம், சில நாடுகள் கொரோனா வைரஸ் குறித்து அளவுக்கு அதிகமான பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

வைரஸ் எமக்கு சவாலாக இருந்தபோதும், அதனை தற்போது நாம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம். எமக்கு உதவிய நாடுகளுக்கு நாம் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாம் பாலஸ்தீன மக்களுக்கும், உலகில் ஒடுக்கப்படும் ஏனைய மக்களுக்கும் ஆதரவாக எப்போதும் நிற்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மியான்மாரில் சிறுவர் பாடசாலை மீது எறிகணை வீச்சு சிறுவர்கள் காயம்

மியான்மாரில் உள்ள றக்கீன் பகுதியில் உள்ள பாடசாலை மீது கடந்த வியாழக்கிமை (13) மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சில் 19 சிறுவர்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அரச படையினருக்கும் சுயாட்சி கோரி போராடி வரும் ஆயுதக் குழுவினருக்குமிடையில் இடம் பெற்ற மோதல்களின் போதே சிறுவர்கள் காயமடைந்துள்ளனர்.

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம் இடம் பெற்று வரும் மோதல்களால் பல பத்தாயிரம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். 2017 ஆம் ஆண்டு இடம் பெற்ற மோதல்களினால் 730,000 முஸ்லீம் மக்கள் றொகின்யா பகுதியில் இருந்து இடம் பெயர்ந்துள்ளனர்.

அரகன் எனப்படும் ஆயுதக் குழுவினரே சுயாட்சி கோரிக்கையை முன்வைத்து ஆயுதப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். பாடசாலை மீதான எறிகணைத் தாக்குதலை ஆயுதக் குழுவினரே மேற்கொண்டனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். ஆனால் தம்மிடம் அவ்வாறான பீரங்கிகள் இல்லை என ஆயுதக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

வியாழக்கிழமை காலை பாடசாலை மீது எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததாக அந்த பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் றொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இரு தரப்பினரும் தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என மியான்மாருக்கான பிரித்தானிய தூதுவர் தெரிவித்துள்ளார். இந்த மோதல்களில் பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருவதாகவும், இரு தரப்பினரும் பொது மக்களை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சவுதியின் நவீன போர் விமானம் யேமனில் வீழ்ந்தது



சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணிப் படையினரின் அதிநவீன றொனெடோ ரக போர் விமானம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை(14) யேமனில் தாக்குதலில் ஈடுபட்டிருந்த சமயம் வீழந்து நொருங் கியுள்ளது.

இந்த விமானத்தை தாம் தரையில் இருந்து வானுக்கு செல்லுத்தும் அதிநவீன ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தியதாக யேமனில் போராடி வரும் கௌத்தி ஆயுதக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் விமானம் வீழ்ந்ததை அறிவிப்பதில் தாமதம் செய்த சவுதி அதிகாரிகள் பின்னர் நேற்று (15) அதனை உறுதிப்படுத்தியுள்ளனர். வடக்கு அல் ஜவா பகுதியில் போர் விமானம் வீழ்ந்து நொருங்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, றொனெடோ ரக அதிநவீன விமானம் சுடப்பட்டிருந்தால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனவும், அது களநிலமையை மாற்றிவிடும் எனவும் அல்ஜசீரா செய்தி நிறுவனத்தின் அரசியல் ஆய்வாளர் மார்வன் பிசாரா தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணிப் படையினரின் ஆதரவுடன் யேமன் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 30 பொது மக்கள் கொல்லப்பட்டதாக கௌத்தி சுகாதார அதிகாரிகள் சனிக்கிழமை (15) தெரிவித்திருந்தனர். அதே இடத்தில் தான் விமானம் வீழ்ந்துள்ளது.

உலக வானொலி தினம்
13 பெப்ரவரி 2020

# உலக வானொலி தினச் சிந்தனை

**பற்றிமாகரன்**

**அ**மைதியை வளர்க்கவும் அனைவரையும் உள்வாங்கவும் குறைந்த செலவில் நிறைந்த பயனை வாழ்வின் எல்லா நிலையில் உள்ள மக்களுக்கும் உதவும் திரள் நிலை ஊடகம் வானொலி. இதனால் தான் 13.02.2020 அன்று உலக வானொலித் தினத்தை ஐக்கிய நாடுகள் சபை கொண்டாடிய பொழுது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ராசு *(António Guterres)* அவர்கள் " இந்த வானொலி தினத்தில் வானொலியின் நீடித்த சக்தியை மதித்து அதன் உதவி கொண்டு அமைதியானதும் அனைவரையும் உள்வாங்குவதுமான பன்முகத்தன்மை கொண்ட உலகைக் கட்டியெழுப்புவோம்" என அழைப்பு விடுத்தார்.

இன்றைய காலகட்டத்தில் ஈழத் தமிழர்களுக்குத் தங்கள் தாயகத்தில் உண்மையானதும் நேர்மையானதுமான முறையில் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடும் அடிப்படை மனித உரிமைக்கு இனங்காணக் கூடிய அச்சம் சிங்கள பௌத்த பேரினவாத சிறிலங்கா அரசால் தொடரும் சூழலில், ஈழத் தமிழர்களின் நீட்சியாக உலகின் முக்கிய நாடுகளில் எல்லாம் அந்நாடுகளின் இனத்துவச் சிறுபான்மைக் குடிகளாகப் பலம் பெற்றுள்ள புலம்பெயர் ஈழத் தமிழர்களுக்குத் தங்கள் தாயக மக்களின் உரிமைக்குரலாக ஒலிக்க வேண்டிய வரலாற்றுக் கடமையைக் காலம் சுமத்தி நிற்கிறது. இதற்கு உதவக் கூடிய பலம் பொருந்திய ஒன்றுபட்ட சமூக வானொலி ஒன்று அடிப்படை தேவையாக உள்ளது. அப்பொழுதுதான் ஈழத் தமிழ் மக்களுக்கான பலம் பொருந்திய பொதுக் கருத்துக்கோளம் *(Public Sphere)* ஒன்றை உலகில் உருவாக்க முடியும்.

இந்தப் பொதுக் கருத்துக் கோளமே ஈழத் தமிழ் மக்களின் உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும் அவர்கள் தக்க வைத்துக் கொள்வதற்கான பாதுகாப்புக் கவசமாக அமையும். ஈழத் தமிழர்கள் தங்களுக்கான உரிமைகளை சனநாயக வழிகளின் மூலமே வென்றெடுக்க வேண்டும் என்பது அனைத்துலகத்தினதும் இன்றைய எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால் ஈழத் தமிழர்களுக்கான பாராளுமன்ற சட்டவாக்க, சட்ட அமுலாக்க, நிர்வாக உரிமைகள் எல்லாமே சிங்கள பௌத்த பெரும்பான்மைப் பாராளுமன்றத்தால் அது திட்டமிட்டு உருவாக்கிக் கொண்ட பாராளுமன்றச் சிங்களப் பெரும்பான்மையின் மூலம் இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது நடைமுறை உண்மையாக உள்ளது. இதனால் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் இது சிங்கள பௌத்த நாடு, சிங்கள இனம், சிங்கள மொழி, சிங்கள ஆட்சி மட்டுமே இங்கு இருக்க வேண்டும். இதற்குக் கட்டுப்பட்ட இனக் குழுமங்கள் மதக் குழுமங்கள் மட்டுமே இங்கு உள்ளன. இனப்பிர்ச்சினையோ மதப்பிரச்சினையோ இங்கு இல்லை என்பது இன்றைய இலங்கை அரசின் அரசக் கொள்கையாக உள்ளது. இதனாலேயே இந்தியப் பிரதமர் 13 வது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் மக்கள் கௌரவமாக வாழக் கூடிய வகையில் அதிகாரப் பரவலாக்கலைச் செய்யும்படி விடுத்த கோரிக்கையை இலங்கையின் அரச அதிபரும் இலங்கையின் பிரதமரும் சிங்களப் பெரும்பான்மையினர் அதனை விரும்ப மாட்டார்கள். அதனால் செய்ய இயலாது என இரண்டு தடவைகள் பகிரங்கமாக ஊடகங்களுக்கு கூறியுள்ளனர். இச்சூழலில் ஈழத் தமிழர்களின் சனநாயகம் பெரும் ஆபத்துக்குள்ளாகி உள்ளது.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால் இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் தொடர்ந்து இறைமையுடன் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமை இன்றைய சிறிலங்கா அரசாங்கத்தால் வெளிப்படையாக மறுக்கப்படுகிறது. இந்நிலையில் உலகின் குடிமக்கள் என்ற வகையில் ஈழத் தமிழர்கள் தங்களுக்கான பாதுகாப்பான, அமைதியான, தங்களுக்குரிய வளர்ச்சிகளுடன் கூடிய வாழ்வை உறுதிப்படுத்துங்கள் எனத் தங்களின் பிறப்புரிமையான வெளியக சுயநிர்ணய உரிமையினைக் கொண்டு உலக நாடுகளையும் உலக அமைப்புக்களையும் கோருவதே அவர்கள் தங்கள் உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும் தக்க வைத்துக் கொள்வதற்கான ஒரே வழியாக உள்ளது.

ஆனால் அவர்களுடைய அரசியல் பணியைப் படைபலம் கொண்டு அச்சப்படுத்திப் பெற்று வரும் சிறிலங்கா இதற்கு இடமளிக்காது என்பது நடைமுறை உண்மையாக உள்ளது. இந்த இக்கட்டான நிலையில் புலம்பெயர் தமிழர்கள் உலகத் தமிழர்கள் வழியாகவே ஈழத் தமிழர்களின் நாளாந்த வாழ்வுக்கான மனித உரிமைப் பாதுகாப்பும், அதீத மனிதாய தேவைகளும் *(Extreme Humanitarian Needs)* உரிய காலத்தில் உரிய நேரத்தில் உலகின் கவனத்திற்குக் கொண்டு வரப்படல் அவசியமாகிறது.

இலங்கைத் தமிழ்த் தேசியப் பிரச்சினை உலகத்தால் தான் தீர்க்கப்பட முடியும் என்பது மீண்டும் மீண்டும் நாளும் பொழுதும் உறுதியாகிக் கொண்டிருப்பதால், ஈழத் தமிழர்களின் பொதுக் கருத்துக் கோளமாகப் பலம் பொருந்திய ஈழத் தமிழர்களின் உலக வானொலி ஒன்று எந்தவித காலதாமதமும் இல்லாமல் கட்டமைக்கப்பட வேண்டிய நேரமாக இன்று உள்ளது. இதனை உலக வானொலி தினத்தை ஐக்கிய நாடுகள் சபை கொண்டாடும் இந்த மாசி மாதத்தில் உலகத் தமிழர்கள் கவனத்தில் எடுத்துச் செயற்பட்டாலே வர்த்தக நோக்கிலான வானொலிகள் மற்றும் ஊடகங்கள் வழி ஊடகமென்பது மகிழ் நிலைக்குரியது என்ற வகையில் புலம்பெயர் தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் திசை திருப்பி சிந்தனை மயக்கத்தை வளர்க்கும் நடைமுறையை மாற்ற முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அவர்களின் இவ்வாண்டுக்கான வானொலி தினஅழைப்பை ஒவ்வொரு புலம்பெயர்தமிழரும் மனதிருத்தி அமைதியையும் அனைவரையும் உள்வாங்குவதையும் உறுதிப்படுத்தச் செயற்படக் கூடிய பலம் பொருந்திய வானொலி ஒன்றை இவ்வாண்டிலேயே உருவாக்கிட உழைத்தல் என்பதைத் தம் இலக்காகக் கொள்வார்கள் என்பது எம் நம்பிக்கை.

• • •

## அபிவிருத்தி என்ற … தொடர்ச்சி..

கூறியிருக்கலாம். அப்படி கூறியிருந்தால் அது நடைபெற்றிருக்கும். அதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. நாங்கள் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது.

**கேள்வி**

**அண்மையில் இலங்கையின் பூர்வீகக் குடிகள் சைவத் தமிழர்கள் என்ற உங்களின் கருத்து தென்னிலங்கையில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. கடந்த காலத்தில் உங்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த வடமாகாண ஆட்சிக் காலத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் புராதன சின்னங்கள் மற்றும் பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை முறைகள் போன்றவற்றை பாதுகாக்க எவ்வாறான முயற்சிகள் எடுக்கப்பட்டன?**

பதில்:

எங்களுக்கு அவ்வாறான உரிமை தரப்படவில்லை. இவை தொடர்பான சகல உரிமைகளும் மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கின்றது. 13ஆம் திருத்தச் சட்டத்திற்கமைவாக அது முழுமையாக மத்திய அரசிற்குரியது. எந்த வகையிலும் நாங்கள் அவற்றை மேற்கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கின்றோம். பௌத்தம் இலங்கைக்கு வரும்போது அவர்களை வரவேற்றது தமிழ் சைவ அரசர்கள். இது சரித்திர ரீதியான உண்மை. அப்போது சிங்கள மொழி எந்த இடத்திலும் பேசவில்லை. சிங்களவர்கள் இருக்கவில்லை. 1300 அல்லது 1400 ஆண்டுகளுக்கு முன்னர் தான் சிங்கள மொழி நடைமுறைக்கு வந்தது. ஆகவே நான் சரித்திர உண்மைகளைக் கூறுகின்றேன். இதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றதென்றால், மக்களுக்கு யார் இவற்றை எடுத்துக் கூறுவது? இவ்வளவு நாளும் இவற்றை கூறாதபடியால்தான் சிங்கள மக்கள் எங்களை 10ஆம் நூற்றாண்டில் வந்த கள்ளத்தோணிகள் என்று கூறுகின்றார்கள். அது தவறானது. 10ஆம் நூற்றாண்டில் சோழர்கள் காலத்தில் தமிழர்கள் இங்கு வந்தது உண்மை. அதற்கு முன்னர் பாண்டியர்கள், பல்லவர்கள் என்று பலர் இங்கு வந்துள்ளனர்.

ஆதிக்குடிகள் தமிழ் மக்கள். அண்மையில் மட்டக்களப்பில் கி.மு 300 ஆண்டுகளுக்கு முன்னர் பாவிக்கப்பட்ட பல கண்டெடுப்புக்களிலிருந்து தமிழ் அந்தக் காலத்திலிருந்தது. சைவம் அந்தக் காலத்திலிருந்தது என்பதற்கு அடையாளம் இருக்கின்றது.

**கேள்வி:**

**ஒரு நீதியரசர் என்ற முறையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்னவாக இருக்கிறது?**

**பதில்:**

காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டிய ஒரு கடப்பாடு அரசாங்கத்திற்கு இருக்கின்றது. குறித்த ஒரு தினத்தில், நேரத்தில், குறித்தவர்களின் முன்னிலையில், குறித்த ஒருவர் முன்னிலையில் இவர்கள் பாரப்படுத்தப்பட்டனர். அதற்கு சாட்சிகள் இருக்கின்றன. அவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. அவர்களுக்கு என்ன நடந்தது என்று அந்த இடத்திலிருந்து விசாரணை நடத்தி எங்களுக்கு சொல்ல வேண்டும். அவர்கள் நிலத்தின் அடியில் இருக்கின்றார்கள் என்று கூறமுடியாது. அவர்கள் இறந்து விட்டார்கள் என்று கூறமுடியாது. குறித்த ஒரு இடத்தில் அவர்களை ஒப்படைத்தோம். அந்த இடத்திலிருந்து அவர்களை என்ன செய்தீர்கள்? இதற்குரிய பதிலை நீங்கள் தரவேண்டும்.

இது தொடர்பான குற்றவியல் விசாரணையை பாரபட்சம் இல்லாமல் ஒரு சர்வதேச ரீதியாக நடத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது. காணாமல் போனோர் அமைப்புகளின் செயற்பாடுகளில் ஒரு பிரயோசனமும் இல்லை. அத்துடன் குற்றவாளி என கண்டால்கூட ஒன்றும் செய்ய முடியாது. அவர்களை நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். அவர்கள் இன்னும் ஒரு பத்து வருடத்திற்கு இழுத்தடித்த வண்ணம் இருப்பார்கள். ஆகவே ஒன்றுமே நடக்காது. சர்வதேச ரீதியாக நடைபெறும் குற்றவியல் விசாரணைக்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் என்பதே எனது கருத்து.

• • •

# அமெரிக்காவின் பயணத் தடை முக்கிய கட்டத்திற்கு பூகோள அரசியல்

**வேல்ஸ் இல் இருந்து அருஸ்**

**சிறீ**லங்கா அரசுடனான உறவுகளை விரிவு படுத்துவதில் ரஷ்யா அதிக அக்கறை கொண்டு ள்ளது. அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் சம்பவங்களை அவதானித்தால் இது நன்கு புலப் படும்.



சிறீலங்காவில் புதிய அரசு அமைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் அதாவது கடந்த வரு டம் ஒக்டோபர் மாதத்தில் இருந்து தற்போது வரை யிலுமான ஏறத்தாழ 4 மாத காலத்தில் பல படைத் துறை அதிகாரிகள் சிறீலங்காவுக்கு உயர் மட்ட பயணங்களை மேற்கொண்டுள்ளதுடன், சிறீலங் காவின் 72ஆவது சுதந்திர தினத்திற்கும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் சிறப்பு செய்தி ஒன்றை அனுப்பியிருந்தார்.

அரபு உலகத்தின் வசந்தம் என்ற பெயரில் அரபு நாடுகள் மீது மேற்குலகம் மேற்கொண்ட, தமக்கு ஆதரவான அரசுகளை உருவாக்கும் முய ற்சி, சிரியாவில் இடம் பெற்று வரும் போரில் தடம் புரண்டுள்ளது. ஈரான் விவகாரத்திலும் அவர் களால் அதிகம் முன்நகர முடியவில்லை.

இவை இரண்டுக்கும் காரணம் ரஷ்யாவின் உள்நுழைவாகும். அதாவது ஈராக், லிபியா என மேற்குலகம் நடவடிக்கைகளை மேற்கொண்ட போது, பார்வையாளராக இருந்த ரஷ்யா சிரியா விவகாரத்தில் நேரிடையாக களமிறங்கியதுடன், ஈரான் விவகாரத்தில் ஈரானுக்கு தனது ஆயுத தொழில் நுட்பங்களை வழங்கி பலப்படுத்தியுள்ளது.

சிரியாவின் விவகாரத்தை பொறுத்த வரையில் ஏறத்தாழ 12 நாடுகள் இந்த போரில் பங்கெடுத்து வருகின்ற போதும், அமெரிக்கா, இஸ்ரேல், சவுதி அரேபியா, ரஷ்யா, துருக்கி, கட்டார், ஈரான் ஆகிய நாடுகள் நேரிடையாக பங்கெடுத்து வருகின்றன.

இஸ்லாமியத் தீவிரவாதி களுக்கு எதிரான போர் என அமெரிக்கா களமிறங்கிய போதும், அவர்களின் உண்மையான நோக்கம் சிரியாவில் தமக்கு சார்பான ஆட்சியை கொண்டு வருவதே.

ஆனால் ரஷ்யா சிரியாவுக்கு ஆதரவாக களமிறங்கியதால் கள நிலமை மாறிவிட்டது. அதே சமயம், ஆட்சி மாற்றம் என்ற அமெரிக்காவின் உள்நோக்கம் அறிந்த துருக்கியும் ரஷ்யாவின் பக்கம் நிலையெடுக்க தலைப்பட்டது. அதனை தடுப்பதற்கு அமெரிக்கா முயன்ற போதும், அமெரி க்காவின் எதிர்ப்புகளையும் மீறி ரஷ்யாவின் எஸ் 400 என்ற அதி நவீன ஏவுகணைகளை துருக்கி பெற்றுக் கொண்டது.

அதாவது தமக்கு ஆதரவான பூகோள சக்தி களை இணைப்பதன் மூலம் தமது வர்த்தக மற்றும் பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்துவதே இந்த போரின் பின்னுள்ள நோக்கம்.

எனவே தான் தற்போது சிரியா விவகாரம் தொடர்பில் ரஷ்யாவும் துருக்கியும் முரண்பட் டுள்ள நிலையில், அதனை தனக்கு சதகமாக்க முயன்று வருகின்றது அமெரிக்கா. அதற்காக அமெரிக்கா தனது சிறப்புத் தூது வரை துருக்கிக்கு அனுப்பியிருந்தது. அதாவது துருக்கியை ரஷ்யாவின் பக்கமிருந்து நகர்த்தும் திட்டம் இது. இந்த நிலையில் தான் தற்போது ரஷ்யாவின் பார்வை சிறீலங்கா மீது பதிந்துள்ளது.

ஒக்டோபர் மாதம் ரஷ்யாவின் அனைத்துலக படைத்துறை ஒத்து ழைப்பு பிரிவு அதிகாரிகள் கேணல் மக்சீம் பென்கின் தலைமையில் சிறீலங்கா வந்திருந்ததுடன், இரு தரப் பு படைத்துறை ஒத்துழைப்புகள் குறித்த கலந்துரையாடலையும் மேற் கொண்டிருந்தது. ஒவ்வொரு வருடமும் இடம் பெறும் இந்த கல ந்துரையாடல்களில் இரு தரப்பு பயிற்சிகள், படை த்துறை உதவிகள் குறித்து நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதாக படைத்தரப்பு வட்டாரங் கள் தெரிவித்துள்ளன.

அதேசமயம், அனைத்துலக மனித உரிமை அமைப்புகளால் போர்க் குற்றவாளி என உறுதிப் படுத்தப்பட்ட மற்றுமொரு சிறீலங்கா இராணுவ அதிகாரியான கமால் குணரட்ணவை சிறீலங்காவின் புதிய அரச தலைவர் பாதுகாப்புச் செயலாளராக நியமித்தவுடன், சிறீலங்காவுக்கான ரஷ்யாவின் தூதுவர் யூரி மெற்றெரி அவரை சந்தித் திருந்தார். கடந்த நவம்பர் மாத இறுதிப் பகுதியில் இடம் பெற்ற இந்த சந்திப்பில் இரு தரப்பு உறவு கள் குறித்து ஆராயப்பட்டது.



அதன் பின்னர் ரஷ்ய இராணுவத்தின் தளபதியான ஜெனரல் ஒலெக் சலுகோவ் சிறீலங்கா வுக்கு இந்த மாதம் பயணம் மேற்கொண்டது மிகவும் முக்கியமானது. சிறீலங்காவின் 72ஆவது சுதந்திர தினத்தில் பயணம் மேற்கொண்ட குழு வில் தரைப்படையின் பிரதித் தளபதி மேஜர் ஜெனரல் விளமிடீர் சிறிடோவ், கேணல் இகொர் ஸ்ரின் ஆகியோர் அடங்கியிருந்ததுடன், சிறீலங்கா வுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவின் 62 ஆவது ஆண்டு நிகழ்வையும் அவர்கள் கொண் டாடியதுடன், சிறீலங்கா அரச தலைவரையும் சந்தித்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த வாரம் ரஷ்ய படையினரின் பொறியியல் பிரிவினர் சிறீ லங்காவுக்கு வருகை தந்ததுடன், வன்னிக்கும் பயணங்களை மேற்கொண்டிருந்தனர். லெப். ஜெனரல் லூறி ஸ்ரவிற்ஸ்கி தலைமையிலான இந்த குழுவினர் கண்ணி வெடிகளை அகற்றும் பயிற்சி என்ற போர்வையில் சிறீலங்காவுக்கு வருகை தந்திருந்தனர்.

இதனிடையே, சிறீலங்காவில் அணுசக்தி மின்னிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் தாம் ஆய்வு செய்து வருவதாக சிறீலங்காவுக்கான ரஷ்ய தூதுவர் யூரி மெற்றெரி தெரிவித்துள்ளார்.

அதாவது ரஷ்யாவின் இந்த நகர்வுகள் என்பது அண்மையில் ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் அமைத்துக் கொண்ட புதிய வர்த் தக கூட்டணியின் திட்டமாகும் என்பதை அறிந்து கொள்ள அமெரிக்காவுக்கு அதிக நேரம் எடுக்காது.

எனவே தான் கடந்த வாரம் ஊகவியலாளர் களிடம், பேசிய அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோ அவர்கள், மிலே னியம் சலஞ்ச் உடன்படிக்கை தொடர்பில் அவ சரம் காண்பித்திருந்தார். ஆனால் அமெரிக்காவின் பிரசன்னத்தை தென்னாசியாவில் தடுப்பதில் மேற் கூறப்பட்ட மூன்று நாடுகளுக்கும் தொடர்புகள் உண்டு.

அமெரிக்காவின் உன்படிக்கைக்கு எதிராக பௌத்த துறவிகள் போராட்டம் மேற்கொள்ள ஆரம்பித்தது அமெரிக்காவுக்கு அதிக சினத்தை ஏற் படுத்தியுள்ளது. அதவாது சிறீலங்காவின் அரசிய லில் பௌத்த துறவிகளின் ஆதிக்கம் அதிகம் என்பது அமெரிக்காவுக்கு நன்கு தெரியும்.

இந்த நிலையில் தான் கடந்த வெள்ளிக் கிழமை (14) சிறீலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவீந்திர சில்லா மேற்கொண்ட போர்க் குற்றங்களுக்கு தகுந்த ஆதாரங்கள் உள்ள தால் அவருக்கு பயணத்தடை விதிப்பதாக அமெரி க்கா தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு நிறைவடைந்த போரில் 58 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய சில்வா அதிகளவில் போர்க் குற்றங்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உள்ளதாக அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் மைக் பொம்பியோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தென்னாசியாவின் பூகோள அரசியல் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளதற்கான அடையாளம் தான் இந்த அறிவி ப்பு. ஆனால் இதனை தமிழ் மக்கள் எவ்வாறு பயன் படுத்தப் போகின்றனர் என்பது தற்போது முக்கியமானது.

எதிர்வரும் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் கூட்டத் தொடரில் அமெரிக்கா தனது ஆதாரங்களை முன்வைத்து சிறீலங்காவுக்கு எதிரான நட வடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை தமிழ் மக்கள் அமெரிக்கா விடம் முன்வைக்க வேண்டும்.

• • •



# அறிமுகப்படுத்தப்படும் புதிய நோய்களும் பயமுறுத்தும் செய்தி ஊடகங்களும்

பரமபுத்திரன்

பகுதி 2

வைரசுக்கள் தாமாக வாழ முடியாதவை. இன்னோர் உயிருள்ள அங்கியின் உடலினுள் சென்றால் மட்டும் வாழக்கூடியவை. ஒரு உயிருள்ள அங்கியினுள் புகும் வைரசு அந்த அங்கியினை பயன்படுத்தி தன்னை பெருக்க ஆரம்பிக்கும். இந்த அங்கிதான் விருந்து வழங்கி. வைரசுக்கள் மனிதர்களை மட்டும் விருந்து வழங்கியாக பயன்படுத்துவதில்லை. வேறு விலங்குகளையும் விருந்து வழங்கியாக பயன்படுத்தும். வைரசுக்கள் விருந்து வழங்கியை பயன்படுத்தி தன்னை பெருக்கும் போது அதன் விளைவாக எங்களின் உடலில் நடைபெறும் மாற்றங்களே எமக்கு நோயை விளைவிக்கின்றன. எனவே வைரசு நோய் வராது இருக்க வைரசுக்களை உடலினுள் புகவிடாது தடுத்தல் சிறந்தவழி என்பது சரி. அதற்காகவே முகக் கவசமிடுதல், சாப்பிட முன்பு நன்றாக கைகளை கழுவுதல், நோயாளிகளின் அருகில் செல்லா திருத்தல் போன்ற அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் அதனையும் தாண்டி உடலினுள் புகும் வைரசினை என்ன செய்வது? எப்படி அந்த வைரசிடமிருந்து தப்புவது?

இப்போது முன்னைய காலம் தொடர்பாக சிந்தியுங்கள். அந்தக்காலத்தில் தமிழர்கள் மத்தியில் பரிகாரிகள் வாழ்ந்தார்கள். நோய்கள் வரும் போது இவர்களிடம் சென்றால் மருத்துவம் செய்வார்கள். செலவும் குறைவு. இவர்களுக்கு தனித்த ஒரு மதிப்பு என்று கிடைப்பதில்லை. மருத்துவம் என்ற அடிப்படையில் நாம் அவர்களை நம்புவதும் இல்லை. இன்றும் ஊரில் வாழ்ந்து கொண்டு, சித்த மருத்துவம் அல்லது ஊர் மருத்துவம் செய்பவர்கள் மதிக்கப்படுவதில்லை. ஆனால் பல்கலை கழகங்களில் கற்று 'டாக்டர்' பட்டம் பெற்றவர்கள் எம்மால் மிகவும் மதிக்கப்படுவார்கள். ஐயா மிகவும் படித்தவர் என்ற எண்ணம் எங்களிடம் வலிமையாக உள்ளதால் நாம் அவர்களை நம்புகின்றோம். அவர்களின் ஆலோசனைக்கும் மருந்துகளுக்கும் அடிமையாகின்றோம். உண்மையில் எல்லா மருத்துவத்தையும் தாண்டிய சக்தி வாய்ந்த ஒன்று எங்கள் உடல் என்று எமக்கு தெரிவதில்லை. அதன் ஆற்றலையும் நாம் விளங்கிக் கொள்ளவதில்லை. தேவையற்று மருந்துகளை உண்பது எங்கள் உடலின் ஆற்றலை கெடுக்கும் என்பதும் எமக்கு புரிவதில்லை. ஊர் வைத்தியர்கள் வழங்கும் மருந்துப்பொருட்கள் உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றலை தூண்டச்செய்யும். ஆபத்துகளை விளைவிப்பது குறைவு. அப்படி என்ன நோய் எதிர்ப்பு ஆற்றல்கள் எங்கள் உடலில் உண்டு?.



மனித உடலினுள் வெளிப்பொருட்கள் புகுவதற்கு பலவழிகள் உண்டு. தினம்தினம் நுண்ணுயிர்கள் உடலில் புகுந்த வண்ணமே உள்ளன. எமது உடலின் எதிர்ப் புத்தன்மை அவற்றை எல்லாவற்றையும் தடுத்த படிதான் உள்ளது. நோயிலிருந்து பாதுகாத்துதான் வைத்திருக்கிறது. ஆனாலும் அதனையும் மீறி நுண்ணுயிர்கள் உடலினுள் நுழைகின்றன. நுண்ணுயிர்கள் புகுந்து உடலின் உட்செல்ல சுவாச வழி மிகவும் இலகுவானது. நோய்க் கிருமிகள் நேரடியாக உடலின் உட்புறம் சென்று சேர்ந்து விடும். ஆனாலும் சுவாசப் பாதை கிருமிகள் புகுவதை தடுக்க பல தடைகளை இயற்கையாகவே கொண்டிருக்கும். அதாவது மூக்கிலிருந்து வளி சென்றடையும் சுவாசப் பாதை எல்லைவரை பிசிர்கள், ஒட்டும் தன்மையுள்ள சளி என்பன உண்டு. இங்கு கிருமிகள் புகுந்தவுடன் அவற்றை சளிமூலம் ஒட்டச் செய்து பிசிர்களால் அசைத்து வெளித் தள்ளிவிடும்.



எனவே இவற்றை தாண்டித்தான் கிருமிகள் உட்பிரவேசிக்கவேண்டும். இந்த தடைகளை வெற்றிகரமாக தகர்த்து நோய் கிருமிகள் உட்பிரவேசித்தால் அடுத்து என்ன? எங்கள் உடலில் இருக்கும் சில கலங்கள் வெளியிலிருந்து வந்த கிருமியை கண்டு பிடித்து விடும். கிருமி வந்த செய்தி உரிய பகுதிக்கு அறிவிக்கப்படும். அதேபோல் உடலுக்குள் புதிதாக நுழையும் கிருமிகளை கட்டுப்படுத்தும் கலங்களும் இருக்கும். இக்கட்டுப்படுத்தும் கலங்கள் உடனடியாக விரைந்து வந்து கட்டுப்படுத்த தொடங்கும். இதுதான் நோய் தொற்று நிலை. அதாவது எங்கள் உடல் வழமைக்கு மாறான பல மாற்றங்களை காட்டும். இதே வேளை தொற்றியுள்ள கிருமி எது? எந்தக் கலம் அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உள்ளது? என்ற ஆராய்ச்சியும் உடலுக்குள்ளேயே நடக்கும். இந்த ஆராய்ச்சி மூலம் தொற்றியிருக்கும் கிருமியை அழிக்கும் ஆற்றல் உள்ள கலங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்படும். உற்பத்தி செய்யப்பட்ட நோய் எதிரிகள் உடனையாக நோய் த்தொற்று உள்ள இடத்துக்கு அனுப்பப்படும். இதனால் தான் புதிய நோய் ஒன்று தொற்றும் போது குறைந்தது மூன்று நாட்களில் இருந்து ஏழு நாட்கள் வரை நாம் பொறுமை காக்க வேண்டும். அதாவது உட்புகுந்த நோய்க் கிருமி கண்டறியப்பட்டு சரியான முடிவு கண்டறிய உடல் எடுக்கும் கால அளவு அது. இதற்குள் சரியான முடிவு கண்டு பிடிக்கப்படின் எங்கள் உடலே வந்த கிருமிகளை சிதைத்து அழிக்கும். அதே வேளை தொற்றிய கிருமி பலம் வாய்ந்ததாயின், உடல் கலங்களை தாக்கி மேலும் முன்னேறி தீவிர நோயை விளைவிக்கலாம். உடலும் அதற்கு எதிராக தொழிற்பட தயங்குவது இல்லை. இது எங்கள் உடலின் நோய் எதிர்க்கும் ஆற்றலில் தான் தங்கியிருக்கும். இதன் விளைவு நோய் நீங்குதல் அல்லது இறப்பாக அமையலாம். மேலும் ஒருமுறை தாக்கிய அதே நோய்க் கிருமி மீண்டும் வரும் எனின் உடனடியாக அவற்றை அழிக்கும் வல்லமை உடையதாக எமது உடல் இருக்கும். காரணம் எங்கள் உடலில் முன்பே இந்தக் கிருமிகள் ஊடுருவியுள்ளதால் உடல் இலகுவாக இனம் கண்டு எதிர் தாக்கத்தை ஆரம்பிக்கும். அநேகமான வைரசு நோய்களுக்கு இது பொருந்தும். இதனால் சிறிதளவு நோய் நிலை தோன்றலாம் அல்லது நோய் வராது போகலாம். ஆனால் இது எங்கள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியில் தங்கியிருக்கும்.

தற்காலத்தில் நோய் வந்தவுடன் மாற வேண்டும் என்று நாம் சிந்திக்கின்றோம். உடலில் இருந்து நோயை பிடுங்கி எறிய வேண்டும்என்று விரும்புகின்றோம். இதனால் மருத்துவரே கதி மருந்தே வழி என்று நினைக்கின்றோம். இதன் விளைவாக எங்களின் இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தியை நாமே குறைத்துக் கொள்கின்றோம். இதேவேளை விசகடி வைத்தியர் ஒருவர் எனக்கு சொன்ன ஒரு செய்தியை கூறவிரும்புகின்றேன். அந்த வைத்தியர் நாட்டு மருத்துவம் செய்பவர். நாட்டு மருத்துவர்கள் சில நடைமுறைகளை வைத்திருப்பார்கள். அதாவது ஒருவர் பாம்புக் கடிக்கு ஆளாகி அவரிடம் வந்தால் அவருக்கு மருந்து கொடுப்பார்கள். தங்கள் வீட்டில் தங்க வைத்திருப்பார்கள். பாம்பினால் கடியுண்டவரை மற்றவர்கள் பார்க்க அனுமதிக்க மாட்டார்கள். மருத்துவரிடம் காரணம் கேட்டேன். சொன்னார். பாம்பினால் கடியுண்டு என்னிடம் வருபவருக்கு மருந்து வழங்குவது மட்டுமல்ல, இதனால் ஒன்றும் உனக்கு ஆபத்தில்லை என்று நம்பிக்கை யூட்டி, அவரை சமாதானப்படுத்தி வைத்திருக்க வேண்டும். ஏனென்றால் பாம்பினால் கடியுண்டவர்கள் தாங்கள் இறந்துவிடுவோம் என்று பயப்படுவது வழமை. இவ்வாறு மருத்துவ சிகிச்சை பெற்று தனது வீட்டில் தங்கி இருக்கும் ஒரு வரை பார்க்க வரும் இன்னொருவர் வாசலுக்குள் வரும் போதே குளறி அழ ஆரம்பிப்பார். அதுவும் சும்மா அல்ல,"மலையான மலையடா, உன்னையே பாம்பு கடிச்சு சரிச்சு போட்டுதடா. இனி எப்ப பாக்கப் போறனெண்டு ஏங்கிப்போனன்" இப்படியான வார்த்தைகளை கேட்டதும் ஏற்கனவே பய த்துடன் இருந்தவர் இன்னும் பயப்படுவார். எனவே அவரை தேற்றி மருந்து செய்வது மிகவும் கடினம். எனவே நோயாளியை நம்பிக்கையான நிலையில் வைத்தே மருத்துவம் செய்யவேண்டும் என்று கூறுவார். ஆனால் இன்று அப்படி அல்ல. நோயாளிக்கு தனது நிலை தெரியவேண்டும் எல்லாவற்றையும் தெளிவாக சொல்ல வேண்டும் என்கிறார்கள். அதன்பின் அவர்களுக்கு அறிவுரை வழங்கலாம் என்கிறார்கள். இதுதான் இன்றைய வைத்தியமுறை. அவுஸ்திரேலியாவில் எனக்கு தெரிந்த ஒரு பெண் கூறினார். தனது கணவருக்கு புற்று நோய் மருத்துவமனையில் இருந்தார். இறுதி நாளில் நடந்த சம்பவம். கணவர் வாந்தி எடுத்துள்ளார். அந்த வாந்தி வழமையிலும் வேறுபாடாக இருந்தது. அதனை பார்த்த மருத்துவர் சாவு நேரம் நெருங்கி விட்டது என்று அவருக்கு நேரடியாகவே சொன்னாராம். அந்த வேளையில் தான் கணவர் தன்னை பார்த்த ஏக்கம் தாங்க முடியவில்லை என்று சொன் னார். அதன் பின் தன் கணவர் தன்னுடன் எதுவும் பேசவில்லை. சாகப் போகின்றேன் என்ற ஏக்கத்துடன் இறந்து போனார் என்று சொன்னார்.

எனவே நோய்க்கு பயந்து ஏங்குவதை தவிர்த்து, மருத்துவத்தை நம்பி ஏங்கி அலைவதிலும், நம்மையே நம்பி உடலை பாதுகாத்து, உடல் ஆரோக்கியத்துடன் வாழ்வதே சிறப்பு.

முற்றும்